தயாரிப்பு: திருமதி. M.J.F.பர்வின்
கே/தெஹி/தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்

**01 . பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு கடத்தப்படும் இயல்புகள் எவ்வாறு அழைக்கப்படும்?
2. மனித குடித்தொகையில் தலைமுறையுரிமையடையும் சிறப்பியல்புகள் 2 தருக?
3. தலைமுறையுரிமை அடையாத இயல்புகள் 2 தருக?
4. பிறப்புரிமையியலின் தந்தை யார்?
5. ஒற்றை கலப்புப் பிறப்பாக்க சோதனை என்றால் என்ன?
6. பின்வரும் பதங்களை விளக்குக?
    1. ஆட்சியான இயல்பு
    2. பின்னிடைவான இயல்பு
    3. ஓரின நுகம்
    4. பல்லின நுகம்
7. பரம்பரையலகுகள் எங்கே காணப்படும்?
8. பிறப்புரிமைப்பொறியியல் பயன்படும் துறைகள் 3 தருக?
9. பரம்பரையலகு விகாரம் என்றால் என்ன?
10. பாரம்பரியம் தொடர்பான அறிவைப் பயன்படுத்தி மனிதர்கள் அடைந்த அனுகூலம் 2 தருக?

**2) மெண்டல் தோட்டப் பட்டானித் தாவரத்தை பயன்படுத்தி தலைமுறையுரிமை தொடர்பாக செய்த பரிசோதனைக்குரிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.**

| தோற்றவமைப்பு | வட்டமான வித்து | திரங்கிய வித்து |
|---|---|---|
| பெற்றோர் பிறப்புரிமையமைப்பு | RR | rr |
| புணரிகள் | R | r |

F1 பரம்பரை தோற்றவமைப்பு. - வட்டமான வித்து

,, பிறப்புரிமையமைப்பு- Rr

1. இப்பரிசோதனையில் பயன்படுத்தியுள்ள உறழ்பொருள் இயல்பு யாது?
2. இச் செயன்முறையின்போது ஒடுக்கற் பிரிவு எந்தப் படிமுறையில் நிகழும்?
3. மேலே தரப்பட்ட பரிசோதனைக்கேற்ப F1 பரம்பரையின் ஒற்றைக்கலப்புப் பிறப்பாக்கத்தின் போது இயல்புகள் தலைமுறையடையும் விதத்தை வரிப்படம் ஒன்றின் மூலம் காட்டுக?
4. மேற்குறித்த கலப்புப் பிறப்பாக்கத்தின் F2 பரம்பரையில் கிடைக்கும் எச்சங்களின் பிறப்புரிமை அமைப்புக்களையும் அவற்றின் தோற்ற அமைப்புக்களையும் எழுதுக?

**3. வினாக்களுக்கு விடையளிக்க**

1. ஓர் மனித உடற் கலத்திலுள்ள இலிங்க நிறமூர்த்த சோடிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
2. இலிங்க நிறமூர்த்தங்களை கருத்தில் கொண்டு மனிதனில் இலிங்க நிர்ணயம் செய்யப்படும் விதத்தை வரிப்படத்தை பயன்படுத்தி காட்டுக?
3. ஆண்களுக்கு மாத்திரம் உண்டாகும் இலிங்கமிணைந்த தலைமுறையுரிமை பெற்ற நோய் எது?
4. அந்நோய்க்குரிய பரம்பரையலகுக் காரணம் யாது?